தி/கிண்/இஹ்ஸானியா மகளிர் வித்தியாலயம்

முதலாம் தவணைப் பரீட்சை – 2020

நேரம் : 3 மணித்தியாலம்

தரம்–10

தமிழ் மொழியும் இலக்கியமும் - I & II

பகுதி – I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் பொருத்தமான விடையை தெரிவு செய்க. வினாத்தாள் 1 இற்குறிய புள்ளி 40 ஆகும்.

1) உறக்கம் கொண்ட சிறுவனை தாய் தூக்கிச் சென்றாள். உறக்கம் என்பதன் எதிர்ச்சொல்
1. நித்திரை 2. துயில் 3. தூக்கம் 4. விழிப்பு

2) அவையில் அமளிதுமளி ஏற்பட்டதால் அமைச்சர் வெளியேறினார். அவை என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. கூட்டம் 2. சபை 3. பன்மை 4. குவை

3) ஆழி சூழ் உலகமெல்லாம் பரதனே ஆள வேண்டுமெனக் கையேயி விரும்பினாள். ஆழி என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. மழைத்துளி 2. யானை 3. அமுதம் 4. கடல்

4) அரிவையர் தங்கும் இடங்கள் மகளிர் விடுதிகள் எனப்படும். அரிவையர் என்பதன் எதிர்ச்சொல்
1. பெண்கள் 2. ஆடவர் 3. வயோதிபர் 4. மூத்தோர்

5) நளன் தமயந்தியை நடுநிசியில் கானகத்தில் விட்டுச் சென்றான். நடுநிசி என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. இரவு 2. இராத்திரி 3. நள்ளிரவு 4. நண்பகல்

6) பிறர்க்கு இன்னாதன செய்தல் நற்பண்பாகாது. இன்னாதன என்பதன் எதிர்ச்சொல்
1. இன்னா 2. நல்லன 3. இனிய 4. கெட்ட

7) பரீட்சையில் சித்திபெற்ற பாமா பெருமகிழ்வு கொண்டாள். மகிழ்வு என்பதன் எதிர்ச்சொல்
1. உவமை 2. ஆனந்தம் 3. அதிர்ச்சி 4. குவலை

8) ஏழைக்கு இரங்குதல் வேண்டும். இரங்கு என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. மனமுருகு 2. இரக்கப்படாதே 3. இறங்கிச் செல் 4. இறங்கு

9) மடைத்தலையின் ஒடு மீன் ஓட உறுமீன் வருமளவும்.... இதில் மடைத்தலை என்பது
1. நீரோடும் வாய்க்கால் 2. பெரிய தலை 3. சமுத்திரம் 4. குளம்

10) கோதை குழலில் பூமாலை சூடி வந்தாள். கோதை என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. பெண் 2. மாலை 3. கூந்தல் 4. கூளை

11) அரசர் காட்டில் ஒரு வேடனைக் கண்டார். வேடன் என்பதன் எதிர்ப்பால்
1. இடைச்சி 2. குறத்தி 3. வேடத்தி 4. வேடுவிச்சி

12) குரங்கு கடுவன்:- குதிரை...
1. வடவை 2. கலை 3. போத்து 4. குண்டு

13) கணவனை இழந்தவள் விதவை போல மனைவியை இழந்தவன்
1. மணமகன் 2. நாயகன் 3. தலைமகன் 4. தபுதாரன்

14) கழுகின் இளையது பிள்ளை என்பது போல பனையின் இளையது
1. கன்று 2. குட்டி 3. வடலி 4. நாற்று

15) ஆட்டின் மலம் பிழுக்கை. கழுதையின் மலம்
1. எச்சம் 2. விட்டை 3. சாணம் 4. இலத்தி

16) மியூசியத்தில் (Museum) புராதனப் பொருட்களை பார்வையிடலாம். மியூசியம் என்பதன் தமிழ் வடிவம்
1. சிறப்பங்காடி 2. அருங்காட்சியகம் 3. அமைவனங்கள் 4. வலைத்தளம்

www.ikedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom Online வகுப்புக்கள்

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்





ICT

Maths **English**

Tamil **History**

Science

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

Contact

76667-4945

17) மலையும் மலை சார்ந்த இடமும்
1. முல்லை 2. குறிஞ்சி 3. மருதம் 4. நெய்தல்

18) பின்வருவனவற்றுள் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க சொல்
1. மழை 2. இழை 3. உரை 4. முணி

19) அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன
1. நாற்படை 2. நற்குணம் 3. நானிலம் 4. நால்வேதம்

20) ஒற்றுமையே பலமும் வெற்றியும் தரும் என்னும் பொருள் விளக்கும் பழமொழி
1. அழுத பிள்ளை பால் குடிக்கும்
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
3. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்
4. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

21) சபையில் சொல்லத்தகாத சொல்லைத் தவிர்த்து வேறு வகையில் சொல்லுவது
1. மற்றொன்று விரித்தல் 2. மறைமொழி
3. ஒம்படைக் கிளவி 4. இடக்கரடக்கல்

22) எப்படியும் வெளிநாடு செல்ல வேண்டும் என்று அவன் ஒற்றைக் காலில் நிற்கிறான்.
"ஒற்றைக்காலில் நிற்றல்" என்ற மரபுத்தொடரின் பொருள்
1. பலமற்று நிற்றல் 2. பிடிவாதமாக நிற்றல்
3. உறுதியற்று நிற்றல் 4. ஆசைப்படுதல்

23) நியாயம் கேட்டல் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர் பில் சொல்லுவது
1. தட்டிப் பேசுதல் 2. தட்டிப் பார்த்தல்
3. தட்டிக் கேட்டல் 4. தட்டிக் கொடுத்தல்

24) வீண் செலவு செய்பவன்
1. உதவாக்கரை 2. கருமி 3. ஊதாரி 4. பேதை

25) "ஆற்றிலே கரைத்த புளி போல" என்ற உவமைத் தொடருக்கு நிகரான பிறிதொரு உவமைத் தொடர்
1. அணை கடந்த வெள்ளம் போல
2. காட்டில் எறிந்த நிலா போல
3. ஆணை வாயிற் கருப்பு போல
4. ஆணை உண்ட விளாம்பழம் போல

26) இயல்புப் புணர்ச்சி இடம்பெற்றமைந்தது
1. கல்லெறிந்தான் 2. சோறுண்டான்
3. வேலெறிந்தான் 4. சோற்றுருண்டை

27) "எந்தக் காரிருளையும் கிழித்துக் கொண்டு குடுகுடுவென நடக்கும் மனோதைரியம்..... குடுகுடு என்பது
1. அடுக்குத் தொடர் 2. இணைமொழி
3. அடுக்கிடுக்குத் தொடர் 4. இரட்டைக் கிளவி

28) பின்வருவனவற்றுள் பகாப்பதம்
1. ஊரான் 2. அழகு 3. வாட்டம் 4. பாடல்

29) உடன்நிலை மெய்மயக்கம் இடம்பெற்ற சொல்
1. கழுத்து 2. பந்து 3. காய்ந்து 4. மஞ்சள்

30) பின்வருவனவற்றுள் பெயரடை
1. வேகமாக 2. வேகமாய் 3. வேகமான 4. வேகவேகமாய்

31) "வாழையடி வாழையாக" என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது
1. நன்றியுணர்வு 2. மாற்றமின்மை
3. பாரம்பரியத் தொடர் 4. இரட்டைக் கிளவி

32) அவன் ஒழுங்காகப் படிக்கவில்லை
அவன் பரீட்சையில் சித்தியடையவில்லை

மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
1. எனினும் 2. என்றாலும் 3. எனவே 4. இருப்பினும

புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

33) நாட்டின் வரலாற்றையும் பண்பாட்டையும் உணர்த்துவனவாய் அமையும் தொல்பொருட்கள் ..... காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
1. சுவடிகள் கூடத்தில் 2. களஞ்சிய சாலையில்
3. நூதனசாலையில் 4. திறைசேரியில்

www.ked.lk

34) வேலைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக விளம்பரம் …….. வெளிவந்துள்ளது.
1. வர்த்தமானியில் 2. சுற்று நிருபத்தில்
3. வெள்ளையறிக்கையில் 4. பாராளுமன்றத்தில்

35) …….. என்பது நூலின் தொடக்கத்தில் அதன் ஆசிரியர் அல்லாத வேறொருவரால் எழுதப்படுவதாகும்.
1. முன்னுரை 2. நூன்முகம் 3. அணிந்துரை 4. பொருளடக்கம்

வாக்கியத்தில் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

36) மாணவர்களோடு சேர்ந்து ஆசிரியரும் சிரமதானத்தில் ……
1. ஈடுபட்டனர் 2. ஈடுபட்டார்கள் 3. ஈடுபடுவர் 4. ஈடுபட்டார்

37) இன்று ஜனாதிபதி தலைமையில் கூடும் அமைச்சரவை நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக விரிவாக ……..
1. ஆராய்ந்தது 2. ஆராய்ந்தார்கள்
3. ஆராயவுள்ளது 4. ஆராய்வார்கள்

38) வாழ்க்கைப் பாதையில் …… ஏற்படுவது சகஜம்
1. அருமை பெருமை 2. அறம் மறம்
3. இன்பமும் துன்பமும் 4. கங்குகரை

39) விமலன் …….. வீடு வந்து சேர்ந்தான்
1. கொஞ்சிக்குலாவி 2. கையுங்களவுமாய்
3. கட்டித்தழுவி 4. ஓட்டமும் நடையுமாக

கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40) அ. நம்முடைய அன்புக்குப் பாத்திரமானவர்களுக்கு நாம் எப்படித் தீமை செய்ய முடியும்
ஆ. மனிதனுக்கு இயல்பாகவே அன்பு என்ற பண்பு இருக்கிறது
இ. அதை வளர்த்தால் மற்றைய உயிர்களுக்கு தீங்கு செய்யவே மாட்டான்
ஈ. அதற்கு மாறாக நன்மையே செய்ய முற்படுவோம்
உ.
1. அ இ ஆ ஈ உ 2. ஆ இ அ உ ஈ
3. அ உ ஆ இ ஈ 4. ஆ ஈ உ இ அ

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.
இவ்வினாத்தாளுக்குரிய புள்ளி 80 ஆகும்.

01. சுருக்கமான விடை தருக.
பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
1. "அங்கழியும் தான் தனதென்ற சிறுவட்டம்"
2. "போடா மூதேவி! இதிலே நிண்டியோ ஏப்பைக் காம்பாலை வாங்கப் போறாய் என்னட்டை"
(அ) மேற்படி வாக்கியம் எந்தப் பிரதேச வழக்கு?
(ஆ) "ஏப்பைக் காம்பு" என்பதன் திருத்தமான வடிவம் யாது?
3. பின்வரும் வாக்கியத்தை பொருத்தமான நிறுத்தற் குறியீடு கொண்டு அமைக்க.

" சிறுமி என்னை இவ் அடக்கு முறையிலிருந்து காப்பாற்றுபவர்கள் யாருமில்லையா என அழுதாள"

4. "ஏகபோகம்" என்ற சொல்லின் கருத்துப் புலப்படுமாறு அச்சொல்லை ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.
5. "துணி" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியம் எழுதுக.
6. "வ.வே.சு ஐயர் பாரதியின் கவிதைகளுக்கு விமர்சனம் எழுதப்பட்டது." இதனை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.

7. "கணங்களின் பேராற்றில் மின்னி மறைகின்றன பல்லாயிரம் எண்ணக் குவியல்கள்"
8. "கவிமணியின் பாடல்கள் எளிமை நிறைந்தவை"

www.kalvi.lk

"கவிமணியின் பாடல்கள் இனிமை நிறைந்தவை"
மேற்படி தனிவாக்கியத்தை கூட்டுவாக்கியமாக அமைக்குக.

9. கட்டுரை எழுதும் போது பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள் மூன்று கூறுக.
10. இருபதாம் நூற்றாண்டு தமிழ்க்விதை எனும் தலைப்பில் கட்டுரை எழுதியவர் யார்?

(10x2=20புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிந்து 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதிப் பொருத்தமான தலைப்பிடுக.

1. எந்த நாட்டிலும் சிறுவர் நலன் பேணப்பட வேண்டும். அவர்களுக்கான உரிமைகள் மறுத்தல் கூடாது. நாளைய தலைவர்கள் அவர்களே. எனவே கல்வி, விளையாட்டு முதலான சகல உரிமைகளையும் வழங்கி அவர்களை உருவாக்க வேண்டும் என்னும் நோக்கிலமைந்த ஒரு விளக்கக் கட்டுரை.

2. குடும்பத் தலைவிகள் பொருள் தேடி வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்குச் செல்வதனால் குடும்பங்கள் பொருளாதாரம், அந்தஸ்து முதலான விடயங்களில் உயர்கின்றன என்ற கருத்துடைய ஒருவருக்கும், உரிய பராமரிப்பின்மை, ஒழுக்கக்கேடு முதலான காரணங்களால் குடும்பங்கள் சிதைகின்றன என்ற கருத்துடைய ஒருவருக்குமிடையேயான ஓர் உரையாடல்.

3. அன்னையின் பெருமையினை பறை சாற்றும் வகையில் அன்னையர் தினத்தன்று உமது பாடசாலையில் நீர் நிகழ்த்தும் மேடைப்பேச்சு.

4. "பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்" என்னும் கருப்பொருளுக்கமைவான ஒரு சிறுகதை.

04. பின்வரும் உரைநடைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சீன மொழியில் நீதி நூல்கள் பல உள்ளன. எனினும் அவற்றுள் கன்பூசியஸின் "முதுமொழியும், "நடுவழிக் கோட்பாடுமே" சிறப்புடையன. மற்ற நூல்கள் எல்லாம் வெறும் தத்துவ ஆராய்ச்சி நூல்களாக உள்ளன. லவோட்டைவின் வாழ்க்கை நெறியில் இலக்கிய இன்பம் பயக்கும் இனிய இயல்புகள் பல உள்ளன. ஆயினும் அந்நூலை நாம் நீதி இலக்கியமாக கொள்ளுவதற்கில்லை. அதை இறையியற் பண்புடைய தத்துவ நூலாகவே நாம் கருத நேரிடுகிறது. அறத்தைப் பற்றிய கருத்துக்கள் இதில் இலைமறை காய் போன்று உள்ளன.

கன்பூசியஸின் முதுமொழி நல்லதொரு நீதி நூலாகும். அதில் கருத்துவளம் இருக்கிறது. கற்பனை நலமில்லை, கலையழகு இல்லை. இலக்கியத்தின் நறுமணம் அதில் கமழவில்லை.

1. சீன மொழியில் எழுந்த நீதி நூல்களாக இங்கே குறிப்பிடப்படுபவை எவை?

2. அவற்றின் ஆசிரியர்கள் யாவர்?

3. வாழ்க்கை நெறி என்ற நூலை நீதி நூலாகக் கொள்வதில் ஆசிரியர் ஏன் தயக்கம் காட்டுகிறார்?

4. முதுமொழி என்ற நூலின் ஆசிரியர் காணும் குறைபாடு யாது?

5. "இலைமறை காய் போல" என்ற உவமைத்தொடர் இங்கே எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

20புள்ளிகள்

05. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து **100 சொற்களுக்குக்** குறையாமல் எழுதுக.

1. உமது பிரதேசத்தின் பாதைகளில் குப்பைகளைப் போடுவதால் ஏற்படும் வ்ளைவுகள் பற்றியும், அதனை அகற்றுவது பற்றியும் சுட்டிக்காட்டி மாநகர மேயருக்கு ஒரு கடிதம்.

(15புள்ளிகள்)

அல்லது

உமது பாடசாலையின் விளையாட்டுக் குழுவின் செயலாளராக உம்மைக் கருதிக் கொண்டு உமது பாடசாலையில் நடைபெறவிருக்கின்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி தொடர்பான செய்திகளைப் பிரசுரிப்பதற்காகப் பின்வரும் அம்சங்களைக் கருத்திற்கொண்டு 100 சொற்களில் பத்திரிகைச் செய்தி ஒன்று எழுதுக.

www.ksou.lk

தி/கிண்/இஹ்ஸானியா மகளிர் வித்தியாலயம்

முதலாம் தவணைப் பரீட்சை – 2020

நேரம் : 2 மணித்தியாலம்

தமிழ் மொழியும் இலக்கியமும்

தரம்–10

பகுதி - III

1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

01. சுருக்கமான விடை தருக.

1. "திரிகடுகம்"

(அ) இந்நூல் ஆசிரியர் பெயர் என்ன?

(ஆ) திரிகடுகம் குறிப்பிடும் மூன்று மூலிகைகளும் எவை? பெயர் என்ன?

2. "உப்பில்லாக் கஞ்சியினை யுண்ணு மறு சுவை போல்" எனும் அடியை சந்திபிரித்து எழுதுக.

3. வாக்குண்டாம் பாடலில் கொக்கின் இயல்பாகக் கூறப்படுவது யாது?

4. "உப்பில்லாக் கஞ்சியினை யுண்ணு மறு சுவை போல் தப்பிய கந்தைபீ தாம்பரம் போல....."

(அ) இங்கு அறுசுவை உணவாகக் கருதப்படுவது எது?

(ஆ) "தப்பிய கந்தை" என்பதனால நீர் விளங்கிக் கொள்வது யாது?

5. திரிக கடும் பாடலில் கூறப்படும் நன்மை பயக்காத மூன்று விடயங்களையும் தருக.

6. "நாவலர் எழுந்தார்" என்னும் கட்டுரையில் நாவலர் அவர்களுக்கு ஏற்பட்ட நோய் எது?

7. இனியவை நாற்பது பாடலாசிரியர் யார்?

8. நாவலர் எழுந்தார் கட்டுரையாசிரியர் யார்?

9. "விலகு பிள்ளை..... அது கிடக்க எடுத்துக் கொண்டு வா, தபாற் கட்டுக்களை"

(அ) அக் கூற்றைக் கூறியவர் யார்?

(ஆ) "பிள்ளை" என்று இங்கே குறிப்பிடப்படுபவரின் முழுப்பெயர் என்ன?

10. நாடலடியார் பாடலில் யானையின் நட்பை விட நாயின் நட்பு சிறந்தது எனக் கூறப்படுகிறது. இதில்

(அ) யானையின் நட்பு பற்றி யாது கூறப்படுகிறது?

(ஆ) நாயின் நட்பு பற்றி யாது கூறப்படுகிறது?

(10x2=20புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. "அடக்கம் உடையார் அறிவிலர் எண்ணிக்
கடக்க கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஒடுமீன் ஓட உறுமீன் வருமளவு
வாடி இருக்குமாம் கொக்கு

(அ) இத்தொடர் இடம்பெறும் நூல் எது?

(ஆ) இதனூடாக கவிஞர் கூறும் செய்தி என்ன?

2. நாவலர் கூட்டத்துக்கு தலைமை தாங்கவில்லை. அந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு பக்கத்தில் ஒரு தூணுக்கு அருகிலே துண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்து கொண்டு மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி

www.ikedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

அழையுங்கள் :
76667-4945



zoom

எப்பாத்திலிருந்தும்
இணையலாம்



தரம் 1
தொடக்கம்

தரம் 5
வரை

- பாடத் தெரிவுகள் செய்ய முடியாது.
- சகல பாடங்களுக்குமான மாதக்கட்டணம்
- அனைத்து பாடங்களுக்குமான recording வழங்கப்படும்.

நுண்ணறிவு
வினாத்தாள்
(பகுதி 1, பகுதி 2)

Spoken English

தமிழ்
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
சிங்களம்

உள்ளங்கைகளினால் நெற்றியைத் தாங்கிக் கொண்டு கூட்ட நடைமுறைகளை அவதானித்துக் கொண்டிருந்தார்.

(அ) நாவலர் கூட்டத்தின் நடைமுறைகளை எவ்வாறு அவதானித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது?

(ஆ) இத்தொடரில் சிறப்பிக்கப்படுவது யாது?

3. "நாவலர் எழுந்தார்" இக்கட்டுரையில்

(அ) வை.விசுவநாதப்பிள்ளை பற்றி இக்கட்டுரைப் பகுதியில் கூறப்படும் செய்திகள் எவை?

(ஆ) நாவலரின் திறமை, நேர்மை காட்டப்படுமாற்றை சுருக்கமாகத் தருக.

4. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும். யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்

(அ) கீறியிட்ட தொடர்களின் சிறப்பினை விளக்குக.

(ஆ) நாலடியார் பாடலில் யானையின் நட்பை விட நாயின் நட்பு சிறந்ததெனக் கூறப்படுவது ஏன்?

5. கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
முக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே
எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது.

(அ) இனிமை தரும் விடயங்களைக் குறிப்பிடுக.

(ஆ) இதனூடாக வலியுறுத்தப்படுவது யாது?

03. நீர்ப்பாடல்களில்

1. தண்டாமரையினுடன் பிறந்தும்.....

2. கணக்காயரில்லாத ஆரும்..... பாடல்கள் தரும் கருத்துக்களை விளக்குக.

அல்லது

"அடக்கம் உடையார் அறிவிலர்....." எனத் தொடங்கும் வாக்குண்டாம் பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) இப்பாடலின் கருத்தைத் தருக.

(ஆ) இப்பாடலில் கொக்கின் இயல்பினையும், அடக்கமுடையாரின் இயல்பினையும் விளக்குக.

(இ) இப்பாடலிலுள்ள அணியை குறிப்பிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

04. தண்டாமரையினுடன் பிறந்தும்.....
யானை அணையவர்.....
கற்றார் முன் கல்வி.....
இப்பாடல்கள் உணர்த்தும் நீதிக்கருத்துக்களைத் தொகுத்துத் தருக.

அல்லது

(அ) தேம்படுபனையின்.....

(ஆ) உப்பில்லாக் கஞ்சியினை..... செய்யுள்களின் பொருளைத் தருக.

(15 புள்ளிகள்)

5,6,7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒன்றை மாத்திரம் தெரிவு செய்து விடை எழுதுக.

05. பின்வருவன யாரால், யாருக்கு கூறப்பட்டது.

(அ) "அது கிடக்க எடத்துக் கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை"

(ஆ) ஒருவர் ஒருவராகவே, இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டங் கூட்டமாகவோ வரலாம். (10 புள்ளிகள்)

06. "அவரவர் மனங்களுக்கேற்பவே அவரவர் வாழ்வு சிறக்கும்" (மனங் கொண்டதே மாளிகை) முதுமொழி வெண்பாவை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(10 பள்ளிகள்)

07. (அ) வெற்றிவேற்கை- நீதிப்பாடல் வெளிப்படுத்தும் கருத்துக்களை உமது நடையில் எழுதுக.

(ஆ) விவேக சிந்தாமணி- நீதிப்பாடலின் பொருளை உமது நடையில் எழுதுக.

(10 புள்ளிகள்)

www.ikedu.lk